உ

சிவமயம்



வடகைதை மேன்மை பெறு சைவ வேளாண்குலத் திலகியும்,

மானம்பிராய் முதலிவழித் தோன்றலும் ஆகிய

அமரர்

# திருமதி. வேலுப்பிள்ளை சின்னத்தங்கம்

அவர்களின் சிவசங்கமத்தை முன்னிட்டு


வெளியிடப்படும்

# கண்ணருவி மலர் அஞ்சலி

11 - 05 - 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

எம் எல்லோரையும் தனதிரு கண்ணின்

மணிகளாகக் கருதி, எம்முயர்வே எப்பொழுதும்

தனது சிந்தனையாய் எம்மை நெறிப்படுத்தி

ஆளாக்கி எமக்கு என்றென்றும் வழிகாட்டியாக,

உற்ற துணையாக வாழ்ந்து மறைந்த எமது அன்புத்

தெய்வத்தின் நினைவாக அவர் தம்

பாதங்களுக்கு இச்சிறுமலரைக் காணிக்கையாகச்

சமர்ப்பித்து அவர்தம் ஆத்ம சாந்திக்காக

மனமுருக பிரார்த்தித்து நிற்கும்

**மகன், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அமரர்

# திருமதி வேலுப்பிள்ளை சின்னத்தங்கம்



மண்மகளிடம்
05 - 04 - 1909

விண்ணிடம்
11 - 04 - 1998

## திதி வெண்பா

இன் ஈசுரவாண்டு பங்குனித்திங்கள் தனில்
நன் பூர்வபக்கம் பௌர்ணமியாம் – இனியவுயர்
சனிதன்னில் தையலாம் சின்னத்தங்கம்
புனிதன் தாள் கலந்தாள் தனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணுக்கும் மண்ணுக்கும் நாயகனாம்
தன்மையினால் கண்ணிற் பணிமின் கனிந்து

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆளத்துப் பிள்ளையைப் பேணு வாம்.

## முருகன் துதி

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டும்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்பு உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும் போது
உன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## பட்டினத்தார் பாடல்

எல்லா மறிந்து படித்தே யிருந்தெமக் குள்ளபடி
வல்லா னறிந்துள னென்றுண ராது மதிமயங்கிச்
சொல்லான் மலைந்துறு சூழ்விதியின்படி துக்கித்துப்பின்
எல்லாஞ் சிவன்செய லேயென்பர் காண்கச்சி ஏகம்பனே

ஊருஞ் சதமல்ல உற்றார் உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளும்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்தாள் சதம்கச்சி ஏகம்பனே.

ஐயிரண்டு திங்கள் வங்கமெலா நொந்து பெற்று
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் – செய்யவிரு
கைப்புறத்திலேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண் பே னினி.

## பஞ்ச புராணம்

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன்னடி என் மனத்தே
வழுவா திருக்க வரந்தர
வேண்டும் இவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி இருந்தருள்
செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை
மேல்வைத்த தீவண்ணனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை
பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கருளியவா றார்பெறுவார் அச்சோவே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிர என் கண்குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனியேல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோமுக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி அறுக்க நெறிதந்த பித்ததற்குப் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஆதியாய் நடுவு மாகி அளவிலா அளவு மாகிச்
சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

எதிரிலாத பத்தி தனைமேவி
இனியதாள் நினைப்பை இருபோதும்
இதய வாரிதிக்குள் உறவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே
கதிர்காம வெற்பில் உறைவோனே
கனக மேருவொத்த புயவீரா
மதுர வாணியுற்ற கழலோனே
வழுதிகூன் நிமிர்த்த பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாள் துதி

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவி அடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங் குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத்தொழு வார்க்(கு) ஒரு தீங்கில்லையே

## திருமால் துதி

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே
ஆயர்தம் கொழுந்தே என்றும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே.

## வயிரவர் துதி

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

## வாழ்த்து

மழை வழங்குக மன்னவ னோங்குக
பிழையில் பல்வள னெல்லாம் பிறங்குக
தழைக வஞ்செழுத் தோசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே.

**இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க**
**மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்.**

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அமரர்

# திருமதி. வேலுப்பிள்ளை சின்னத்தங்கம்

அவர்களின்

## வாழ்க்கைச் சரிதம்

ஈழத் திருநாட்டின் ஆழி அலையிடை இனிய தமிழ் ஒலிக்கும் யாழ் நகரின் வாடை வழங்கும் வடகீழ்த் திசையில் அமைந்தது கைதை நகராகும். இந்நகர் மஞ்சு அளாவிடும் மா, பனை, தெங்குகளும், பஞ்சம் விரட்டும் பலகனிச் சோலைகளும், ஏரினை ஓட்டும் கணக்கிலாக் கழனிகளும் மலிந்ததாகும். அன்றியும் ஆனைமுகனும் ஆறுமுகனும் அண்மித்து இருந்து அடியார்க்கு அருளினை வழங்குவர். மழலைச் செல்வங்களை நல்லவராக்கும் பள்ளிச் சாலைகளும் பலவுள.

இவ்வண்ணம் உயர்வுறும் கைதையாம் நகரில் வாழையடிவாழையாக வையகம் புகழ் ஏழை பங்காளன் சரவணமுத்துவும் பாரோரேத்தும் பண்பினை பர்வத மங்கையும் ஆற்றிய நல்அறத்தால் மூவிருமக்களை முத்தேவர் போல ஈன்று நின்றனர். வெண்ணீறு உலவும் வேந்தன் சுப்பையாவும் சினத்தை அறியாச் சின்னத்துரையும் அன்புக்கிணையிலா ஆச்சிப்பிள்ளையும் ஆவர். இவர்களை அடுத்துச் சிற்றிடைச் **சின்னத்தங்கம்** தோன்றினள் சுடர் ஒளியாக. இவரது இனிய தம்பி இராமலிங்கமும் முல்லைக் கொடியாள் தில்லைப் பிள்ளையும் இளையவர்களாக இவரது உடன்பிறப்பாகினர்.

ஈன்ற தாய்க்கு நாற்குணம் மலிந்த நல்லவளாக நாலாம் மகளாய் பிறந்த சுடர்க்கொடியாள் சின்னத்தங்கம் குறு குறு நடந்து குதலை மொழி பேசி நாளொருவண்ணமும், பொழுதொரு மேனியுமாக பொங்கிவரும் பெரு நிலவாய் வளர்ந்தனள். கல்விக் காலம் இவரை அணைக்கப் பள்ளி சேர்ந்து கல்விகற்றார். காலமெனும் நங்கை கைப்பட வளர்ந்து வாலைக் குமரியாக நிற்கும் இவரை இல்லறச் சோலையில் நுழைக்க விரும்பினர் பெற்றவர்.

தரும சிந்தையாளன் தம்பு மகனாம், வேலவனை வழுத்தும் வேலையாகக் கொண்ட வேலுப்பிள்ளை வள்ளலை கடிமணஞ் செய்து வைத்தனர் அன்னை தந்தையர். சிவன் தாள் வணங்கும் சின்னத்தம்பியும், சுகந்தன் சுப்பிரமணியமும் மைவிழியாள் மைத்துனராகக் கண்டு மகிழ்ந்தாள். இல்லறமாகிய நல்லறச் சோலையில் இன்னமுதன்ன இனிய பதியுடன் விதி கூட்டியபாதையில் வீறு நடை இட்டனர். இல்லக விளக்காம் நன் மக்கட் பேற்றினை இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கட்கு வழங்கினர். தெய்வ மகளாம் தெய்வானைப்பிள்ளையைத் தலை மகளாகப் பெற்று மகிழ்ந்தனர். தண்ணளிச் சிந்தையன் தம்பு மகனையும் பொற்குவை நிதி போன்ற பொன்னம்பலத்தையும் நற்கதிக் குதவும் நல் மைந்தராக உலகில் பெற்று உவகை பூத்தனள். காராளத் தொழிலுடன் வணிகத்தையும் விரும்பிச் செய்த கணவர்க்கு பத்தினியாள் கைகொடுத்து உதவி வருவாயைப் பெருக்கினள். ஏவாமல் செய்யும் மூவாமக்களையும் கல்வியைக் கற்பித்துக் காட்டினாள் நல்வழி.

மூத்த மகளாம் தெய்வயானைப்பிள்ளை மங்கைப் பருவம் எய்தி நின்றதால் ஆடும் சிதம்பரநாதன் கழல்தொழும் அம்பலவாணர் மகனாம், தவக்கோலம் மலிந்த தம்பிஐயாவை வதுவை செய்து வைத்தனர். அவ்விருவர்க்கும் உதித்த இன் மலர்க்கொடியாள் இராசலட்சுமி. (அவுஸ்திரேலியா), தர்மமே சிந்தைகொண்ட தர்மகுலசிங்கம் (சுவிஸ்) குகனை மறவாக் குமாரகுலசிங்கம் (இலங்கை) ஆகிய மூவரை பேர்த்தி பேரனாகக் கண்டு உளம் மகிழ்ந்தாள்.

இப்படி வாழ் நாளில் சின்னத் தங்கம் வாழ்வில் பேரிடி வீழ்ந்தது. விதி செய்த சதியால் மகளை இழந்து புழுவாய்த் துடித்தாள். மருமகன் நலம் கருதி மகாலட்சுமி நிகர்த்த இராசலட்சுமியை மறுமணஞ் செய்து வைத்தார். இதன் பலனாக அகிலகுலசிங்கம் (இலண்டன்) குகந்தி, சிவதர்சினி மக்களையும் பேரன், பேர்த்தியாக்கினர்.

மேலும் அவர் வாழ்வில் சோதனை வந்தது. விதிப்பயனை வெல்ல முடியாது பதியை இழந்து பதைத்து நின்றார். அடுத்த மகனாம் தம்புச்செம்மலை ஊருணி போல உலகுக்கு உதவும் வேளாண் தொழிலை செய்ய வழிகாட்டினார். அன்னவர்க்கு அம்பிகை உமையும் மட்டுவில் வாழ்ந்த மதிநிகர் மங்கை இராசம்மாவை மணவினை செய்து வைத்தார். அவர்கள் ஈந்த செல்வங்களாம் தவக்குமாரன், தவரஞ்சி, தவரூபன், தவநந்தன் (இலண்டன்) ஆகியோரைப் பேரன், பேர்த்தியாராக கண்டனள்.

கடைக்குட்டி மகனுக்கும் கலியாணம் செய்து பார்க்க விரும்பி, வைத்தீஸ்வரன் வாழும் வண்ணையம்பதியில் யோகமுற்ற யோகேஸ்வரியை மருமகளாக்கி மகிழ்ந்தார். அவர்கள் பெற்ற, நல்பண்புடை நாகவதனி, தயாள சிந்தையள் தர்மினி, தீனதயாளன் தினேஸ், சுறுசுறுப்பாளி சுதர்சினி, வல்லபி வர்ஷினி அன்னவர் செல்வங்கள் பேர்த்தியர் பேரனாக கண்டு உவகை கொண்டார். பூட்டன் பூட்டியாக சரணியா, தவகணனன், தகம்சன், தவகரன், பவிசாந், அனுறுக்ஷி பத்மதீபன் கண்டு களித்தார்.

## இவர் செய்துவைத்த இருமனம் கலந்த திருமண நிகழ்வுகள்:

பேர்த்தி இராசலட்சுமியை கைதடிவாழ் வீரசிங்கம் மகன் சிவசிந்தையன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானப்பிரகாசத்தைக் கரம் பிடிக்க செய்து இன்புற்றார். பேரனாகிய தர்ம குலசிங்கம் தரணியில் வாழக் கோவை பதியுறை வேலாயுதர் மகளாம் சற்குணவதி சாந்தினிக்கு மங்கலநாண் பூட்டி மகிழ்வெய்தினார். அடுத்து அருமை சின்னப் பேரனாம் குமாரகுலசிங்கத்தின் குலம் தழைத்தோங்க கைதை வாழ் வீரசிங்கத்தின் கனிஷ்டபுத்திரியாம் நவமணி நிகர்த்த நவஞானராணியை இணைய வைத்து இதயம் களித்தார். பேர்த்தி தவரஞ்சி தன்னை கைதடிஉறை செல்லத்துரை மகன் தனம்நிறை தவக்குமாரனை மணஞ் செய்வித்து உவகை கொண்டார். பேரன் தவக்குமாரனை சாவகச்சேரி வாழ் சந்தனநங்கையாம் சந்திரமதியை மணம்முடித்து துலங்கும் வாழ்வு கண்டு குதூகலித்தார். பேர்த்தி நாகவதனி கைதடிவாழ் சிவராமலிங்கம் மகன் தண்ணளியான் தயாரூபனை மணக்கக் கண்டு களித்தார். பேர்த்தி சுகந்தி கொழும்பு வாழ் சகாதேவன் மைந்தன் சிறந்த குணமுடையச் சிற்சபேசனை இணையக் கண்டு இன்பமடைந்தார். பேர்த்தி தர்மினி கொழும்புவாழ் விஸ்வலிங்கம் மகவு கனிவுச்சிந்தையன் கருணவேலைக் கைப்பிடித்து இல்லறமென்னும் நல்லற வாழ்வு கண்டு இறும்பூதெய்தினார்.

## தெய்வ சிந்தை

பதியை இழந்தபின் பக்தி செய்ய கோவில்களுக்குச் செல்லாவிடினும், சைவசமய முறைப்படி விரதம் அனுஷ்டித்தல், கோவில் விழாக்கள் செய்ய தவறாது நிதிகள் அளித்தல் இவரத நியமம் தப்பாத செயலாகும்.

## உபகாரி

உற்றார், உறவினர், அயலவர், யாரென்றாலும் இல்லை என்று கேட்டு வருவோர்க்கு நீலவண்ணன் நிறத்தாள் வாரி வழங்குவாள்.

## இவரது இழப்புகள்

முதலில் மூத்தமகள் கணவன் உடன்பிறந்தோர், பேர்த்தி பேரன், மூத்த மகன், மருமகன் எவரை இழந்தாலும் அது உலக இயற்கை என எண்ணி தைரியத்தைக் கைவிடாது வாழ்ந்து வருகையில் பொல்லாப் புழுமலிநோய் மலிந்த புன்குரம்பையில் கோடைஇடி போல நோய் எனும் அரக்கன் பிடியில் அகப்பட்டார். பங்குனித் திங்கள் 28ம் நாள் 11-04-98 சனி பிற்பகல் 5 மணிக்கு அன்பு மகன் அலற பேரன் பேர்த்தியர் பதைக்க, உற்றார் உறவினர் கதற தன் வாழ்க்கைப் பயணம் முற்றுப் பெற, ஆடும்பாதன் சரண் புகுந்தார். அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

தொகுப்பு : **திருமதி. ப. வேலுப்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் தந்த கடமைகளைச் சிறப்புடன் நிறைவேற்றிய மகிழ்வினில் ஆச்சி நீ மறைந்தனையோ?

ஆச்சி!,

நாங்கள் திரும்பிப்பார்க்கிறோம், எங்கள் குழந்தைப் பருவத்தை,

அம்மா கோபித்தால் உடனே ஓடிப்போய் ஆச்சியிடம் அடைக்கலம் புகுந்து விடுவோம். பின் அம்மாவின் கோபம் எங்களை ஒன்றும் செய்ய முடியாது. தோல்வியடைந்த அம்மா நீ இருக்கும் வரை என் குழந்தைகளை ஒழுங்காக வளர்க்க முடியாது செல்லம் கொடுத்துக் கெடுக்கப் போகின்றாய் என்று சலித்துக்கொள்வார்.

ஆனால் திடீரென ஒரு நாள் நோய்வாய்ப்பட்ட அம்மா தன் நோயின் வேதனையால் "ஆச்சி நான் போகிறேன் என் பிள்ளைகளைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்" என்றார். பழம் இருக்கக் காய் போவதா? எதுவோ நோயின் வேதனையில் புலம்பகின்றாள் என்று நினைத்து நானெல்லாம் நன்றாகப் பார்த்துக்கொள்வேன், நீ ஒன்றுக்கும் பயப்படாதே என்று அபயம் அளித்தாய்.

அதையே வேதவாக்காக எடுத்துக் கொண்டு அம்மா போயே விட்டார்.

அன்று ஆச்சி நீ "இப்படிச் செய்து விட்டாளே நஞ்சும் பிஞ்சுமான இந்தக் குஞ்சுகளை நான் எத்தனை காலம் காப்பேன்" என்று கலங்கித் தவித்தாய். ஆனால் அன்று உன் மனத்துள் என்ன சபதம் செய்தனையோ தெரியாது, அம்மா எங்களை வளர்த்தது ஆக மிகச் சில வருடங்கள், அம்மா இல்லாமல் ஆச்சி நீ எங்களை வளர்த்ததோ முழுதாக முப்பத்தைந்து வருடங்கள், சிறிதும் சந்தேகமில்லை எங்களைப் பேணிக் காக்க வேண்டுமென்ற உன் மன வைராக்கியம் தான் உன்னை இவ்வளவு காலம் வாழ வைத்தது.

சாகரம் போன்ற உன் அன்பு எமக்குக் கவசமானதெனின் இம்மியளவும் குறையாத உன் கண்டிப்பு எம்மை நல் வழியே நடாத்தியது.

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்பது போல நீ தாயாகி எம் வளர்ச்சி கண்டு புளகாங்கிதம் அடைந்தாய். என் பேரப்பிள்ளைகளை யாரும் குறை சொல்லாதவாறு வளர்த்திருக்கிறேன் என்று உனக்குத்தான் எத்தகைய பெருமை? ஆமாம் சின்னத்தங்கத்தின் பேரப் பிள்ளைகளின் பண்பினைப் பண்பு மிக்கவர்கள் எவருமே என்றும் குறை சொல்லவில்லை. அவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் ஆச்சி உன் ஆசிகளால் சிறப்புத்தான்.

எங்கள் மூவருக்கும் பின் உனக்கு எத்தனை பேரப்பிள்ளைகள் வந்தாலும் என் பேத்தி, பெரியபேரன், சின்னப்பேரன் என பெருமையுடன் நீ செல்லமாக அழைப்பது எதுவோ எங்களைத்தான். உன் பிறந்த வீட்டுக்குள் நீ இருந்து வெற்றிலை இடிக்கத் திண்ணையில் நாங்கள் இருந்து உன்னைச் சீண்டி விளையாடுவதில் தான் எங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தகைய மகிழ்ச்சி. உன் வெற்றிலைப் பெட்டிக்குள் புதையல் தேடும் உன் பெரிய பேரனின் சாகசங்களை நீ எப்படி ரசிப்பாய்?

ஆச்சி நீ கவலைப்பட்டது, கண்ணீர்விட்டது, கஷ்டப்பட்டது எல்லாம் உன் பிள்ளைகளுக்காகவும், பேரப்பிள்ளைகளுக்காகவும் தான். உனக்கென்று என்றுமே தனிக்கவலைகள் இருந்ததில்லை. ஆனால் என்றும் உன் மனத்தில் எதுவோ ஒரு கவலை இருந்துகொண்டே இருக்கும்.

ஆமாம், பாடசாலைக்குப் போன பேரன் நேரத்திற்கு வராவிட்டால் நீ பதறிப்போய்விடுவாய். யாரையாவது கெஞ்சி, மன்றாடி அவனைப் பார்த்து வரச் சொல்வாய். வரும்வரை வழியிலேயே தவம் இருப்பாய்.

அதுமட்டுமா? வயதான பேத்திக்குத் திருமணமாக வேண்டும். அவளுக்கு ஒரு குழந்தை வேண்டுமென்பது எல்லாம் ஆச்சி உன் கவலைகள் தான் சம்பந்தப்பட்ட நாங்கள் எந்த எண்ணமும் இல்லாமல் இருக்க நீ உன் முருகனிடம் மனுப்போட்டுவிடுவாய். எதுவோ உன் மகளைப் பறித்த முருகன் இந்த உன் வேண்டுதல்களைச் சிறிது தாமதமாகவேனும் மிகச் சிறப்பாக உன் மனம் போலவே நிறைவேற்றி வைத்தான்.

என் மகளைக் கொண்டு பல ஆஸ்பத்திரிப் படிகள் ஏறியும் எவையுமே அவளைக் காக்கவில்லை இனி ஆஸ்பத்திரிப் பக்கமே போகமாட்டேன் என்றிருந்தாய். ஆனால் உன் பெரிய பூட்டி பிறந்த செய்தி கேட்டு எல்லாவற்றையும் மறந்து உடனே ஓடி வந்தாய். அவளை உன் கண்ணின் கருமணிபோல் ஒன்றரை வருடங்கள் உடனிருந்து காத்தாய்.

அன்று நீ அவளுடன் பேசி விளையாடிய மழலைத் தமிழ் தான் இன்றும் அவள் நாவில் நின்று தவழ்ந்து, "வெளிநாட்டில் வளர்ந்து, படித்த ஷரண்யா என்ன அழகாகத் தமிழ் கதைக்கின்றாள்" என்று எல்லோரையும் வியக்கச் செய்கின்றது.

உன் பெரியபேரன் தனித்துவிட்டான் என்று உனக்குக் கவலைதான். ஆனாலும் அவன் மன உறுதியை நினைத்து உனக்கு என்றும் பெருமைதான்.

ஐயாவும் திடீரென இறந்து போக நீ மட்டும் இருந்து உன் சின்னப்பேரனின் திருமணத்தையும் கண்டு மகிழ்ந்தாய். அவன் மகள் அநுறக்ஷியை அம்மாவே வந்துவிட்டா என்று ஆச்சி உனக்குத் தான் எவ்வளவு சந்தோஷம்

ஆச்சி எல்லாம் தான் செய்து விட்டேன் இனி என்ன என்றுநினைத்தனையா அலலது உன் பிள்ளைகளை எப்படி ஆளாக்கியிருக்கிறேன் பார்த்தாயா? என்று அம்மாவிடம் பெருமைப்படச் சென்றனையா?

ஆச்சி உனக்கென்று எந்த ஆசையுமே இருந்ததில்லை. நீ எதைக் கேட்டாலும் செய்ய நாங்கள் காத்திருந்த போதும் நீ ஒன்றையுமே கேட்கவில்லை. ஆச்சி சொன்னா என்று யார் யாருக்கோ என்னவெல்லாமோ செய்தோம், ஆனால் உனக்கென்று நீ கேட்டு நாங்கள் எதையுமே செய்யவில்லை. ஆச்சி நீ விழைந்தது எல்லாம் நாங்கள் சகல சிறப்புக்களுடனும் வாழ வேண்டும் என்பது மட்டும் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும் எங்களைக் கண்டால் எதையாவது தர வேண்டுமென்று உன் கைகளும் மனமும் துருதுருக்கும். ஆகக் குறைந்தது ஒரு மாதுளம் பழமாயினும், சிறிதளவு கடலையாயினும் எங்களுக்குத் தந்து அதை நாங்கள் உன் திண்ணையிலிருந்து கொறிப்பதைப் பார்ப்பதில் உனக்கு ஏற்படும் மகிழ்ச்சியை எழுதவும் முடியுமா?

என் பிறந்த வீட்டை விட்டுப் பிரியமாட்டேன் என்றவர் இனி நான் கொழும்பில் வந்து மாமாவுடன் இருக்கப் போகின்றேன் என்று எழுதினாய். உனக்கு அது எத்தகைய மனக் கஷ்டமாக இருக்குமென்று அசடுகள் எங்களுக்குப் புரிந்திருந்தும், உன் அன்புக் குரலைத் தொலை பேசியிலாவது கேட்கலாம் என்ற நப்பாசையில் வாளாவிருந்தோம். உன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தோம், உன் குரலைக் கேட்கக் காத்திருந்தோம்.

"ஆச்சி எப்போ வருகின்றா? என்று பல தடவைகள் மாமாவிடம் கேட்டு ஈற்றில் மார்ச் மாதம் 28ம் திகதி என்றதும் அந்த நாள் விரைவில் வராதா? ஆச்சியின் குரலைக் கேட்க மாட்டோமா? என்று நாட்களை எண்ணிக் கொண்டிருந்தோம்.

ஆச்சி! உன் பெரிய பேரப்பிள்ளைகளின் குரலைக் கேட்க உனக்கும் ஆசையிருந்தாலும் நீ பிறந்து வளர்ந்து வாழ்ந்த, உன் இன்பமும் துன்பமும் நட்டமும் நயமும் ஒன்றாக அடங்கிய உன் இனிய வீட்டைப் விட்டுப் பிரிய மனமின்றித் தவித்தனையோ? அதனால்தான் உன் இருதயமும் இயங்கத் தயங்கியதோ?

நீ பெருமையுடன் வாழ்ந்த இடத்திலேயே சிறப்புடன் இறுதி யாத்திரை போக விழைந்தனையோ? நீ சிறு வயதில் மாடு மேய்த்து ஓடி விளையாடிய ஊத்தல் சுடலையில் உன் உற்றார் உறவினருடன் உறங்க நினைத்தனையோ? அதனால் தான் சரியாக ஒரு கிழமைக்கு முதல் உன் இருதயம் இயங்கத் தயங்கியதோ?

சின்னப் பேரன் தான் பக்கத்தில் நிற்கிறானே, சின்ன மகனும் வந்தால் போதுமென்று நினைத்தனையோ? ஆச்சி, என்றாலும் உனக்கு அவர்களில் என்றும் அன்பு அதிகம் தான்.

ஆச்சி! உன் உடல் உன் விருப்பம்போல் ஊத்தல் சுடலையில் உறங்கலாம் ஆனால் நீ என்றும் எங்களின் நினைவினில் வாழ்ந்துகொண்டே இருப்பாய். என்றும் உன் அன்பு எங்களுக்குக் கவசமாகவும், உன் அறிவுரை எமக்கு வழி காட்டியாகவும் இருந்து எம்மைக் காக்கும் என்பதில் எமக்கு எதுவித ஐயமுமே இல்லை.

உன்னால் எப்படி எங்களை விட்டுப் போக முடியும்? ஆச்சி நீ எங்குமே போகவில்லை எங்கள் இதயங்களில் தான் இருக்கிறாய், இருந்துகொண்டே இருப்பாய்.

ஆச்சி, உன் ஆத்மா எல்லாம் வல்ல முருகப் பெருமானின் பாதார விந்தங்களின் கீழ் என்றும் அழியாப் பேரின்பப் பெரு வாழ்வை எய்த வேண்டுமென என்றும் பிரார்த்திக்கும்.

பிரியமுள்ள

**உன் முதல் மூன்று பேர முத்துக்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்திரீ மந்திர மகிமையும் அதன் விளக்கமும்

காயத்திரீ மக்களுடைய மந்திரமாகவும், இலட்சியமாகவும், இருப்பது காயத்திரீ மந்திரமாகும்; மக்களுடைய இலட்சியத்தை விளக்குவது காயத்திரீ மந்திரமாம். காயத்திரீ மந்திரம், பிரார்த்தனை, தியானம், யோகம் முதலியவற்றிற்கு ஆணித்தரமாக அமைந்திருப்பதுடன் வேதத்தின் பொருளையும் விளக்குவது காயத்திரீ மந்திரம். பொதுவாக எல்லோரும் ஓதும் மந்திரம் காயத்திரீ யாகும். பொதுவாக உள்ள மந்திரம் காயத்திரீ ஒன்றேயாகும். அது பிரம்மகாயத்திரீ அல்லது சூரியகாயத்திரீ என அழைக்கப்படும். துற விகளுக்கு உரிய காயத்திரீ பரமகம்சகாயத்திரீயாகும். காயத்திரீ என்னும் சொல்லின் பொருள் என்ன? காயத்திரீ என்னும் சொல்லை இரண்டாகப் பிரிக்கலாம். காய + த்ரி என்னும் இரு பிரிவுகள் உண்டு. காய என்றால் கானம் அல்லது இசை எனப்பொருள் படுகிறது.

வேதங்களும் திருமுறைகளும் இசை வடிவாக அமைந்துள்ளன தமிழோடிசைபாடல் மறந்தறியேன் என்னும் மேலாம் கருத்தை இசை மூலம் மனதில் பதியச் செய்வது. இசை மனதிற்கு இனிமையை அளிக்கிறது எனவே காயத்திரீ மந்திரம் கான சொரூபமாக அமைந்து உயிர்களை உயர் நிலைக்கு கொண்டு வரும் வலிமையுள்ளது. தேவாரதிருவாசகங்களை பண்ணோடு பாடும் பொழுது உயிர் இனங்களிடையே ஒரு பாரிய சக்தி பரவுகிறது. காயத்தரீ மந்திரத்திற்கும் அத்திறமை உண்டு. இனி "த்ரி" எனும் சொல் "த்ராயதே" என விரிவுபடுகிறது. பயத்தினின்று காப்பாற்றப்படுகிறது என்பதே இச்சொல்லின் பொருளாகும். (காயத்தே திறாகதி இது காயத்திரீ) ஜெபிக்கும் தோறும் காப்பது காயத்திரீ . நினைக்கும் தோறும் காப்பது மந்திரம் மன்னியதே திறாகதி இதி மந்திரக: பயப்படும் பாங்கில் சீவன்கள் வாழ்கின்றன. இறப்பும் பிறப்பும், பயம், வாழ்வில் இன்னல்களைப் பற்றிய பயம். இப்படிப் பல இன்னல்கள் மத்தியில் உயிரினங்கள் வாழ்கின்றன. நாம் இறைவனை நினைக்கும் போது அல்லது அணு கும்போது அஞ்சாமையைப் பெறுகிறோம். அபயக்கரத்தோடு இறைவன் நம்மை காப்பாற்றுகிறார். காயத்திரீ மந்திரத்தை ஓதுவோர் அபயத்தில் நிலைபெற்றவர் ஆகின்றனர். வாழ்க்கைப் பிரச்சினைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் விலக்கி வைக்க வல்லது காயத்திரி தன்னைச் சார்ந்தவர்க்கெல்லாம் சகல சுகத்தையும் அளிக்க வல்லவன் "சங்கரன்" நாள்தோறும் காலையிலும் மாலையிலும் நண்பகலிலும் நாங்கள் காயத்திரி மந்திரத்தை ஓத வேண்டும். இவ்வாறு அபயத்தை தந்து பிரச்சினைகளை விலக்க வல்ல காயத்திரி மந்திரம் பின்வருமாறு:

ஓம் பூர்புவஸ்ஸ்வ
ஓம் தத் ஸ்விதுர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
த்யோ யோ ந ப்ரசோதயாத்

OM BHUR BHUWAH SWAH
OM TAT SAVITUR VARENYAM
BHARGO DEEVASYA DHEEMAH
DHIYO YO NAH PRACHODAYAT

யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக.

"The Gayatri worship is the worship of God as manifest in the light of the sun, Sri Ramakrishna used to say; The Veda loses itself in Gaytri, Gayatri loses itself in the pranava (om) and pranava loses itself in Samadhi the Superconscious State"

"Gayatri is a very exalted Vedic prayer. Its meaning is: "Let us meditate on the glorious effulgence of that Divine being who has Created the three world terrestrial or earthly region intermediate on Atmospherlc region, Celestial or heavenly region MAY HE direct our understanding"

பூ : புவ :ஸ்வ ஆகிய மூன்றும் நம்மிடத்தில் இருக்கின்றன.

இவை மூன்றும் பூலோகம், புவர்லோகம், சுவர்க்கம் என்று சொல்லப்படுகின்றது. இந்த மூன்றுலோகங்களும் அகத்திலும் புறத்திலும் இருக்கின்றன. பண்பாடு இல்லாதவர்க்கு இம் மூவுலகும் புறத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. மனபரிபாகம் உடையவற்கு இவை மூன்றும் அகத்தே உள்ளன. உயிரினங்கட்கு நாள்தோறும் அனுபவத்தில் உள்ளது மூன்று நிலைகள் ஆகும். அந்த மூன்று நிலைகளும் ஜாக்கிரதம், சொப்பனம், சுஸ்ஷுபதி ஆகும். விழிப்பு, கனவு, உறக்கம் எனவும் கூறலாம். விழிப்பு நிலையில் ஐம்புலன்களோடு மனமும் தொழிற்படுகின்றது; எமக்குப் புறம்பாக உலகம் இருப்பதை புலன்கள் புலப்படுத்துகின்றன. கனவு நிலையில் புலன்கள் செயல்படுவதில்லை. மனது மட்டும் தொழிற்படுகின்றது மனதில் பதிவு செய்யப்பட்ட எண்ணங்களே நாம் கனவில் காணும் உலகமாக அமைந்துள்ளது கனவில் காணும் உலகம் நமக்கு வெளியே இல்லை. கனவற்ற உறக்க நிலையில் மனதும் புலன்களும் தொழிற்படுவதில்லை. ஆழ்ந்த உறக்க நிலையில் எல்லாவற்றையும் விட்டு விலகி நாம் மட்டும் இருக்கின்றோம். நாம் இருப்பதை உணராதது அறியாமை இந்த மூன்று நிலைகளுக்கு அப்பால் உள்ள நான்காவது நிலையை துரியநிலை என்போம். இது நமது நாளாந்த அனுபவத்தில் இல்லை. ஆத்மபோகத்தில் ஈடுடையவற்குத்தான் துரியநிலை விளங்கும். துரியநிலையில் அகண்ட சத்சித் ஆனந்தம் நமக்கு அனுபவமாகின்றது. துரிய நிலையில் நமக்குப் பரம்பொருளின் காட்சி கிடைக்கின்றது. இந்த நிலைக்கு அப்பாற்பட்டநிலை துரியாதீதமாகும். இதை நிர்விகல்ப்ப சமாதி எனலாம். சாதகர்களை இந்த நிலை அடையச் செய்வதே காயத்திரீ மந்திரத்தின் நோக்கமாகும்.

பூலோகம், புவர்லோகம், சுவர்க்கலோகம் ஆகிய மூன்று உலகங்களையும் நாம் நமக்கு அமைத்துக்கொள்ள முடியும். உடல் வாழ்க்கையை ஒழுங்காக அமைப்பது பூலோக வாழ்க்கையாகும். மனதில் மேலான எண்ணங்களை எண்ணுவதும் புவர்லோக வாழ்க்கையாகும். எண்ணத்தைக் கடவுள்பால் வைத்திருப்பது சுவர்க்கலோக வாழ்க்கையாகும். இந்த மூன்று உலகங்களிலும் இறைவனைத் தியானித்து இருப்பவன் இருபிறப்பாளன் அல்லது துவிஜன் ஆகின்றான்.

ய: யார்; ந; நம்முடைய திய; அறிவை ப்ரசோதயாத் ~ தூண்டுகிறாரோ, தத், அந்த, தேவஸ்ய; சுடருடைய ஸவிது; கடவுளின், வரேண்யம் – போற்றுதல் பர்க; ஒளியை, தீமஹி – தியானிப்போமாக.

இறைவனுடைய அம்சங்களாகிய பல தெய்வங்களுக்குப் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்திரி மந்திரங்கள் அமைந்திருக்கின்றன. அவைகள் தேவிகாயத்திரி, சிவகாயத்திரி, விஷ்ணு காயத்திரி, சுப்பிரமணிய காயத்திரி, கணேசகாயத்திரி என்று பாகுபடுத்தலாம். அவை பின்வருமாறு:

**சிவகாயத்திரி**

ஓம் தத் மகேஸாய வித்மஹே
வாக் விஸுத்தாய தீமஹி
தந்நோ சிவ ப்ரசோதயாத்

**விஷ்ணு காயத்திரி**

ஓம் நாராயணாய வித்மஹே
வாஸுதேவாய தீமஹி
தந்நோ விஷ்ணு : ப்ரசோதயாத்

**கணபதி காயத்திரி**

ஓம் தற்புருஷாய வித்மஹே
வக்ர துண்டாய தீமஹி
தந்நோ தந்தி: ப்ரசோதயாத்

**தேவிகாயத்திரி**

ஓம் கானாம்பிகாய வித்மஹே
சக்தி ஹஸ்தாய தீமஹி
தந்நோ சக்திப் ப்ரசோதயாத்

**சுப்பிரமணிய காயத்திரி**

ஓம் தற்புருஷாய வித்மஹே
மஹா சேனாய தீமஹி
தந்நோ சண்முகப் ப்ரசோதயாத்

ஒரு மந்திரத்தினுடைய பொருளை அறிந்தோ அறியாமலோ அதை உச்சரிக்கின்ற அளவு உச்சரிக்கின்றவர்களை அது பக்குவப்படுத்துகின்றது. இது மந்திரசக்தி எனப்படுகின்றது. மந்திரத்தின் ஓசைக்கு அலாதியான சக்தி உண்டு. துறவறத்தார் இல்லறத்தார் உட்பட வழிபாடு செய்கின்ற மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லார்க்கும் பொதுவாக உள்ளது காயத்திரி . ஆனால் இடைக்காலத்தில் இந்த மந்திரத்தை சூத்திரர்களும் பெண்பாலரும் சொல்லக்கூடாது என்ற கொள்கை நிலவியது இது அறியாமையால் தோன்றிய கொள்கையாகும். ஸ்ரீ இராமகிருஷ்ணர் விவேகானந்தர் இக்கொள்கையை மாற்றியமைத்தனர் சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார். என்பதற்கு அமைய காயத்திரி மந்திரத்தை எவரும் பயன்படுத்தலாம். இதை அறிந்து பயன்படுத்துகிறவர்கள் எல்லோரும் இருபிறப்பாளர் ஆகின்றனர் தாயின் வயுற்றில் நின்று பிறப்பது ஒரு பிறவி தன்னுடைய வாழ்க்கையை மேலான வாழ்க்கையாக திருத்தியமைக்க முயல்கின்ற மனிதன் ஆத்மீகத்துறையில் இன்னொரு பிறப்பு எடுக்கின்றான் அவன் துவிஜன் அல்லது இரு பிறப்பாளன் என்று சொல்லப்படுகின்றான். அதற்கு உறுதுணையாக அமைந்திருப்பது காயத்திரி மந்திரமாம்.

ஓயாதே யுள்குவா ருள்ளிருக்கு முள்ளனைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை யாட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துனைத் தானே யுலகேழு
மாயானை யாள்வானைப் பாடுதுங்கா ணம்மானாய்.

எல்லா மூர்த்திகட்கும் தனித்தனி காயத்ரியிருப்பினும் பிரம்ம காயதரி அல்லது சூர்ய காயதரி எல்லாவற்றிற்கும் பொதுவாய் அமைந்த காயத்திரி யாகும். பல காலங்களாக பொதுமக்கள் யபித்து, பிரார்த்தித்து, தியானித்து வந்த மந்த்ரம் இதுவாகும். எனவே இதை உலக பிரார்த்தனையெனலாம். பொருளை உணர்ந்து இதை தியானிப்போரிடத்துப் பேரறிவு உண்டாகிறது. அருள் உணர்வை ஊட்டுதலில் இந்த காயத்ரியும் மேலே உள்ள திருவாசகமும் ஒன்றை ஒன்று ஒத்திருக்கின்றன.

பூலோகம், புவர்லோகம், சுவர்க்கம் என்பன உயிரினங்களின் அமைப்பில் விழிப்புநிலை கனவு நிலை கனவற்ற உறக்கநிலை ஆகிய மூன்று நிலைகளையும் குறிக்கின்றன. இப்பாடலில் உள்ள ஓயாதே என்னும் சொல் இதை உணர்த்துகின்றன.

ஸவித்ரு என்னும் சொல் சூரியதேவதையும் பரமாத்மாவின் சிருஷ்டி சக்தியையும் குறிக்கின்றது. மாயா சக்தியின் துணைகொண்டு பரமாத்மன் உலகைத் தோற்றுவிக்கிறான் அதை ஒழுங்காக நடாத்தவும் செய்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலில் மாது இருக்கும் பாதியனை என்ற பகுதியும், தாயான தத்துவனை, தானே உலகேழும் ஆயானை, ஆள்வானை என்றபகுதிகளும் இதே கருத்தை விளக்குகின்றன.

வரேண்யம் என்பது மிக நல்லது என்னும் போற்றுதற்கு உரியது என்று பொருள்படுகிறது. மனிதன் எதைப்போற்றுகின்றானோ அதன் மயம் ஆகின்றான். இறைவனைப் போற்றுமளவு அவன் இறை மயமாகிறான் பாடுதுங்காண் என்றும் பதம் வரேன்யம் என்பதற்கு நிகரானது.

பாக் - என்ற சொல் அழுக்கை நீக்கி ஒளியை வளர்ப்பது எனப் பொருள்படுகிறது. உயிர்களின் அஞ்ஞான அழுக்கு நீங்குமளவு அவை சிவப்பிரகாசம் பெறுகின்றன. சிற்றுயிா பேருயிராகப் பரிணமிப்பதற்கு ஞான ஒளியே முகாமையாகிறது. "நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனை" என்னும் பதத்தில் சாதாரண ஜீவன் பரித்துக்கு உரிய ஜீவனாக பிரகாசம் பெற்றுப் பெருநிலை அடையும் நிலையை விளக்குகின்றன.

தேவஸ்ய - சுடருடைய - எது திவ்யமானதோ அது தேவன் என்று கூறப்படுகிறது. விளக்குதற்கு உரிய சுடர் விளக்குகளாக அவைகள் மிளிர்கின்றன. கரணங்கள் பண்படுதற்கு ஏற்ப ஞானச்சுடர் வளர்கிறது. வேதியன் என்னும் சொல் இதை விளக்குகின்றது. உண்மையை அறியவும் விளக்கவும் செய்கின்றவன் வேதியன்.

தீமஹி - தியானிப்போமாக உள்குவார் என்னும் பதம் இதனை விளக்குகின்றன. இறைவனை தியானிக்குமளவு இறைத் தன்மை மக்களிடத்து வளர்கிறது.

ந:திய: ப்ரசோதயாத் - நமது அறிவை தூண்டுகிறார் - சேவகனை என்ற சொல்லும் நாயகனை என்ற சொல்லும் இறைவனுடைய இந்தச் செயலை விளக்குகின்றன. உயிர்களைப் பண்படுத்துகிற முறையில் அவன் சேவகன் ஆகிறான். ஞானநிலைக்கு மக்களை இட்டுச் செல்கின்ற முறையில் அவன் நாயகன் ஆகிறான்.

சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் - செல்வர் சிவபுரத்திற்குள்

ஹறி ஓம் தத் சத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ நற்சிந்தனை (1)

சிந்திப்பவன் மனிதன், சிந்தனை தோன்றும் இடம் மனம். சிந்திப்பதன் மூலம் மனிதன், நன்மை தீமை இவையெனப் பிரித்துணருகின்றான். இவ்வாறு சிந்தித்து, நன்மையானவை என உணர்ந்தவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறான். தீமையானவை எனத் தெரிந்தவற்றை நீக்கிவிடுகிறான். இதுவே மனிதத்தன்மை. எனவே, மனம் உள்ளவன் மனிதன் எனப்படுகிறான். இந்த அருமையான மனத்தை அழுக்கேறாதவண்ணம் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். மனத்தைத் தூய்மையாக வைத்திருத்தலே மிகச் சிறந்த அறம் என்கிறார் வள்ளுவர் பெருமான்.

"மனத்துக் கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்,
ஆகுல நீர பிற" என்பது தமிழ்மறை.

மனதைத் தூய்மையாக வைத்திருப்பது எப்படி? இது மிகக் கடினம் என நாம் கருதிக்கொள்கிறோமே தவிர, உண்மையில் மிக இலகுவானது. நமது உடலில் உள்ள அழுக்குகளை நீர், சவர்க்காரம் கொண்டு கழுவி, அகற்றி, உடலைச்சுத்தப்படுத்துவதற்குக் கூடச் சிறிது பணச் செலவு ஏற்படும். அந்தச் செலவு கூட மனத்தைத் தூய்மைப்படுத்துவதற்குத் தேவைப்படாது. நல்ல சிந்தனை, உண்மை பேசுதல், நல்ல கருமங்களை ஆற்றுதல், நல்லவர்களோடு சேர்தல் என்பன மனம் தூய்மையாக இருப்பதால் ஏற்படுபவை.

"அறஞ் செய விரும்பு" என்பது ஔவையார் வாக்கு. அறம் செய்வதற்கும் மனம் தான் முக்கியம். மனம் விரும்பினாலேயே அறம் செய்ய முடியும். மனம் களங்கமற்றுத் தூய்மையாக இருந்தாலே அங்கு தோன்றுகின்ற எண்ணங்கள், விருப்புக்கள் என்பன நல்லனவாக அமையும்.

எமது மனத்தில் படிந்துவிடக்கூடிய அழுக்குகளை வள்ளுவர் வகைப்படுத்தித் தந்துள்ளார். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பவையே அந்நான்கும். இந்த நான்கிற்கும், ஒரு சுடுகளவேனும் எம் மனத்தில் இடம் பெறுவதற்கு இடமளிக்காது ஒழுகிவருதல் மேலான அறம் ஆகும். மனமது செவ்வையானால் மந்திரம் தேவையில்லை என்றும் 'மனம்போல வாழ்வு' என்றும் எம்மத்தியில் நிலவிவரும் முதுமொழிகள் பொருள்நிறைந்தவை. மனிதன் எவ்வாறு நினைக்கின்றானோ அவ்வாறே, அவற்றின் மயம் ஆகின்றான். எனவேதான் நாம் நல்லவற்றையே எப்பொழுதும் நினைக்க வேண்டும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுதுதான் நல்லவர்களாக வாழலாம், என்று பெரியோர்கள் கூறுகின்றனர். உண்மையில் ஒழுக்கம் என்பது ஒருவனது நினைப்புக்களின் கூட்டு மொத்தமே.

எம்மனத்தில் படிகின்ற அசுத்தங்களில் 'அழுக்காறு' என்பது பொறாமை ஆகும். மனத்தில் பொறாமை ஏற்படாது இருத்தல் சிறந்த அறம். பொறாமையின் தீயவலிமை மிகக்கொடியது. மனித நேயத்தையே அழித்து இறுதியில் பொறாமை கொண்டவனையும் அழித்துவிடும் சக்தி வாய்ந்தது. பொறாமை இடம்பெறும் உள்ளத்தில் அன்பினை இடம் பெறச்செய்தால் நாமும் செம்மையாக வாழ்ந்து, ஏனையோரையும் மகிழ்ச்சியாக வாழ வைக்கலாம்.

மற்றொரு அசுத்தம் 'அவா' என்னும் ஆசையாகும்.

"ஆசை மிக மிக ஆய்வரும் துன்பங்கள்: ஆசை விட விட ஆனந்தமாமே" என்பது திருமூலர் வாக்கு. ஆசையின் காரணமாகவே பிறர் பொருளைக்கவரும் எண்ணம் தோன்றுகிறது. நிலையான இன்பம் பெறவேண்டுமாகில் ஆசையை அறவே ஒழிக்கவேண்டும். அறத்தால் வருவதே உண்மையான இன்பம் என்பதை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

வெகுளி என்பது கோபம், சினம் ஆகும். 'சினம் என்னும் சேர்ந்தாரைக்கொல்லி', என்று அதன் கொடுமையான இயல்பு குறிப்பிடப்பட்டுள்ளது. எனவேதான் 'ஆறுவது சினம்' என்கிறார் ஔவைப்பிராட்டியார். தணிக்கப்படவேண்டியது கோபம் எனும் தீயையே, கோபம் பாவமாக முடியும் என்பர். எல்லாப் பாவங்களுக்கும் கோபமே அடிப்படைக் காரணம். பாவத்தை விலக்குவதானால் கோபத்தை விலக்க வேண்டும். "பிறர் சீண்டினாலும் கோபத்தை வரவழையாத ஆற்றலைத்தர வேண்டும்" என்று இறைவனை வேண்டுதல் செய்தல் மேலான பிரார்த்தனை ஆகும். கோபம் செல்லாத இடத்தில் அது தானாக அடங்கிவிடும். தன் கோபம் செலுத்தக் கூடிய இடத்தில் கோபம் வராமல் தடுப்பவனே கோபத்தை அடக்கியவன் என்ற அறத்தைச் செய்தவனாகின்றான். கோபம் தீ, அன்பு மலர் போன்றது. எனவே, கோபம் தோன்றுமிடத்தில் அன்பு மலர மாட்டாது: முகத்தில் புன்னகை தோன்ற மாட்டாது சாந்தியையும்; சமாதானத்தையும் தூரத்தள்ளிவிடும். சினம் தன்னை மட்டுமல்ல தன்னைச் சார்ந்தவர்களையும் அல்லற்படுத்த வல்லது இப்படிப்பட்ட கொடுமையான கோபத்தை நாம் ஏன் ஆராதிக்க வேண்டும். சிந்தித்துப்பாருங்கள். எவருக்குமே நன்மையைத் தராத கோபத்தை முற்றிலாக நீக்கிவிடுதல் மேலான அறம் என்பது "சைவநெறி" கூறும் உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் நமக்கு மொழியைத் தந்தது; பேசும் ஆற்றலைத் தந்தது எல்லோருடனும் இன்சொல் பேசி மகிழ்வதற்காகவே. இன்சொல் பேசுவதனால் அறம் பெருகும், அல்லவை தேயும். நல்ல இனிய கனிகள் இருக்கும்போது காய்களை விரும்பி உண்போர் இருப்பார்களா? இருக்கமாட்டார்கள். இனிய சொற்கள் இருக்கக்கடியதாக இன்னாத சொற்களைப் பேசித் துன்பத்தை அழைப்பது பேதமையாகும். பொறாமை, கோபம், ஆசை இன்னாச்சொல் என்பன மனிதகுலத்திற்கு உரித்தானவை அல்ல என்பதை உணர்ந்து, அவற்றை விலக்கி, அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்து சால்புகளையும் ஆராதித்து உய்வுபெறுவோமாக.

~ முற்றும் ~

## சைவ நற்சிந்தனை (2)

மக்களாகப் பிறந்தவர்கள் ஏதோ ஒரு வகையில் மற்றையவர்களில் தங்கி வாழ்பவர்களாகவும், அதேவேளை பிறிதொரு நிலையில் பிறரைத் தாங்கி வாழ்பவர்களாகவும் உள்ளனர். தம்முடைய அனைத்துத் தேவைகளையும், தாமாகவே, பிறரின் உதவியின்றிப் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் எவரும் இல்லை. இது மக்களினது ஆற்றாமையையும், இயலாமையையும் குறிக்கின்றது. மனித வாழ்க்கை, கொடுக்கல், வாங்கல் போன்றுதான் காணப்படுகின்றது. பிறருக்கு உதவவேண்டிய நிலையிலும் உள்ளோம். இது மக்களிடம் காணப்படுகின்ற விசித்திரமான இயல்பு இறைவன் மாத்திரமே வேண்டுதல், வேண்டாமை இலாதவன். இறைவன் எல்லோரையும் தாங்கி, வாழ்விப்பவன். வேண்டுவார்க்கு வேண்டியனவற்றை வரையாது வழங்கும் பெருவள்ளல் அவன். விருப்பு வெறுப்பு அற்றவன். போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியன் எனவேதான் இறைவன் பரிபூரணனாகவும், பூரண சுதந்திரனாகவும் விளங்குகின்றான் என்று சைவ சித்தாந்தம் குறிப்பிடுகிறது. மக்களாகிய நாம் பிறரில் தங்கி வாழவேண்டியவர்களாக இருக்கின்றோம். எனவேதான் செய்ந்நன்றியறிதல் எனும் விழுமிய பண்பு சைவ மக்களால் பண்டு தொட்டுப் பொன்போற் போற்றப்பட்டு வருகிறது. சைவப் பண்புகளில் தலைசிறந்த ஒன்றாகச் செய்ந் நன்றி அறிதல் வைத்துப்போற்றப்பட்டு வருகின்றது. இவ்வுலகம் நல்ல வண்ணம் இயங்க, மக்கள் செம்மையாக வாழச் செய்ந் நன்றி மறவாமை எனும் பண்பு நன்கு பேணப்படவேண்டியது அவசியம். இதனாலேயே தெய்வப் புலவர் திருவள்ளுவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு என்கிறார்".

எந்த அறத்தை அழித்த பாவிகளுக்கும் மீட்சி பெறுவதற்கு ஏதாவது பிராயச்சித்தமோ, வழிமுறைகளோ இருக்கக்கூடும். பிழைகளை உணர்ந்து இறைவனைப் பிரார்த்தனை செய்யும்போது, பெருங் கருணையினால் மன்னிப்புக் கிடைக்கலாம். ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்து, நன்றி கொன்றவர்க்குக் கழுவாய் இல்லை, உய்வில்லை, மன்னிப்பு இல்லை என்கிறது தமிழ்மறை.

"உப்பிட்டவரை உள்ளளவும் நினை"

"உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யாதே"

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாகக் கொள்வர் பயன் தெரிவார்"

"காலத்தினால் செய்த நன்றி ஞாலத்தில் மாணப் பெரிது"

என்ற கூற்றுக்கள் சைவமக்களால் உணரப்பட்டு வந்துள்ளன.

எமது சைவ இலக்கியங்கள், புராண இதிகாசங்கள் அனைத்தும் செய்ந்நன்றி மறவாமை எனும் உயர்ந்த பண்பினை எடுத்து விளக்கியுள்ளன. அதேவேளை செய்ந்நன்றி மறத்தலால் ஏற்படக்கூடிய தீய விளைவுகளையும் நன்கு எடுத்துக் காட்டியுள்ளன. கந்தபுராணம் இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.

சூரபன்மனும், அவன் தம்பிமார்களும் சிவபெருமானிடம், ஆயிரத்தெட்டு அண்டங்களையும், எண்ணில்லாத காலம் ஆட்சி புரிவதற்கும் அரச போகங்களைத் துய்ப்பதற்கும் வரங்களைப் பெற்றனர். எவராலும் தம்மை அழிக்கமுடியாத வச்சிரயாக்கையையும், பல்வேறு ஆற்றல்களையும், வல்லபங்களையும் பெற்றுத்தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கினர். இதனால் இறுமாப்பும் செருக்கும் அடைந்தனர். சிவபெருமான் செய்த பேருதவியை மறந்தனர். ஆணவத்தின் முழு வடிவினர் ஆயினர். நல்லோர்களை வருத்தினர். போர்க்களத்திலே முருகப்பெருமான் தம்மை எதிர்த்த சூரபன்மனுக்குச் சிறிது நேரம் அறிவினை வழங்கி, தாம் யார் என்பதை அவன் உணர்ந்து கொள்ளட்டும் என்பதற்காக விஸ்வரூபங்கொண்டு அவனுக்குக் காட்சியளித்தார். சூரன் உணர்ந்தும், உணர்ந்துகொள்ளாத நிலையில் மீண்டும் போர் புரிந்தான். முருகப் பெருமானும், சிவபெருமானும் ஒருவரே என்பதை உணரத் தவறினான். தமக்கு வரங்களை நல்கிப் பேருதவி புரிந்த பெருவள்ளலாம் சிவபெருமானை மறந்தான். செய்ந்நன்றி மறந்த குற்றத்திற்கு ஆளாகினான். யாவற்றையும் இழந்து, சூரன் இறுதியில் வீழ்ச்சியுற்றான். நாமெல்லோரும் கந்தபுராண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரத்தின் வழியில் நிற்பவர்கள். செய்ந்நன்றியறிதலைப் பேராண்மையாகக் கடைப்பிடித்து வருபவர்கள்.

எம்மையும், நாம் வாழுகின்ற இவ்வுலகத்தையும், அனுபவிக்கின்ற பல்வேறு போகங்களையும் படைத்துக், காத்து அருள் செய்து வருகின்ற இறைவனுக்கு நாம் எத்துணை நன்றியுடைவர்களாக இருக்க வேண்டும் என்பதைச் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். இறைவன் எவ்வித கைம்மாறையும் எதிர்பார்த்து இவற்றைச் செய்யவில்லை என்பது உண்மையே. இவற்றையெலாம் தனிப்பெருங் கருணையினால் வழங்கிய வள்ளல் எதையுமே எதிர்பார்க்கவில்லை என்பதனால், பெற்றுக் கொண்டவர்கள் நன்றி மறந்திருப்பது நற்பண்பு ஆகாது. எனவே இறைவனுக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். இறைவனைக் கேட்டு, அவன் சொற்படி நடப்பது அவனுக்குச் செய்யும் நன்றியாகும். இறைவன் காட்டிய செந்நெறியில் எம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும். இறைவன் உள்நின்று உணர்த்த உள்ளுணர்வு பெற்ற அருளாளர்கள் வாழ்க்கை நெறிமுறைகளை வகுத்துத் தந்துள்ளார்கள். இவற்றை அறிந்து, அதன்படி ஒழுகுவதே இறைவனுக்கு நாம் காட்டும் நன்றியும், அஞ்சலியுமாகும். அவனை மறவாதிருக்க நாம் மேற்கொள்ள வேண்டிய நன்முயற்சிகளும் ஆகும்.

அடுத்து, எமது முன்னறி தெய்வங்களாக விளங்குகின்ற தாய் தந்தையர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். எமது தாய் தந்தையர்களைப் பார்க்கிலும் கூடுதலாக எம்மீது அன்பையும், ஆதரவையும், நல்லெண்ணங்களையும் கொண்டிருப்பவர்கள் வேறு யாருமில்லை. எமக்காக எவ்வளவோ தியாகங்களையும், அர்ப்பணங்களையும் செய்பவர்கள். தம் ஊனினை உருக்கி எமக்கு வாழ்வொளி தருபவர்கள். அவர்கள் எமக்கு நல்லவற்றையே சொல்பவர்கள். அவர்களின் சொல்வழி நின்று, அவர்களை மனங்கலங்காது பேணிப் பாதுகாத்து, அவர்களின் தேவைகளையும் இன்முகத்துடன் நிறைவேற்றுவதே, பிள்ளைகள் தம் பெற்றார்க்குச் செய்யும் நன்றியாகும். மேலும் எமது வாழ்வின் மேம்பாட்டிற்காக உதவிகள் பலவற்றைச் செய்கின்ற ஆசிரியர்கள், பெரியோர்கள், மூத்தோர்கள், சமூகத் தலைவர்கள், நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரை மதித்து அவர்களுடன் கண்ணியமாக வாழும் பெற்றியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதுவே அவர்களுக்குச் செய்யும் நன்றியாகும். சைவ மக்களாகிய நாம் செய்ந்நன்றியறிதலைப் பேராண்மையாகக் கொண்டு அதனைப் போற்றிப் பேணி நல்வாழ்வு வாழ்வோமாக.

குமாரசாமி சோமசுந்தரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து 11 – 04 – 1998 சனிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி. ஆச்சி திருமதி. வேலுப்பிள்ளை சின்னத்தங்கம் அவர்கள் திடீர் நோய்வாய்ப்பட்டு இருந்த நாட்களில் சிரத்தையுடன் சிகிச்சை அளித்த மருத்துவ கலாநிதி கணேசலிங்கம் அவர்களுக்கும், தொடர்ந்து கௌரவசேவை ஆற்றிய தாதி திருமதி. ச. இரத்தினகாந்தி அவர்களுக்கும், பகல் இரவு நேரம் விசுவாசத்துடன் கண்காணித்த திருமதி. சி. சீதேவிக்கும், பல்வேறு உதவிகள் நல்கிய உறவினருக்கும், அன்னாரது இறுதிக் கிரியைகளிற் கலந்துகொண்டும் உதவிகள் பல புரிந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் ஈடுபட்டும் எங்கள் ஆற்றொணாத் துயரத்தில் பங்கு கொண்டு தேறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவர்க்கும் 11 – 05 – 98 அன்று நடந்த சபிண்டிகரண அந்தியேட்டி கிரியைகள் குறைவிலாது நடைபெற உதவியோருக்கும் அவற்றில் பங்கு கொண்டு சிறப்பித்தவர்களுக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

மகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

கைதடி வடக்கு,
கைதடி. 11-05-98

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நாளை அன்புடன் தொடங்கு
இந் நாளை அன்பினால் நிரப்பு
இந் நாளை அன்பினில் கழித்திடு
இந் நாளை அன்புடன் நிறைவு செய்
இதுவே கடவுளை அடையும் வழி
ஏனெனில் அன்பே கடவுள்

START THE DAY WITH LOVE
FILL THE DAY WITH LOVE
SPEND THE DAY WITH LOVE
END THE DAY WITH LOVE
THIS IS THE WAY TO GOD

TYPESET AND PRINTED AT PRINT GRAPHICS
NO - 4 NELSON PLACE, COLOMBO - 6 TELE - 596312

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org